Supply of essential commodities through mobile centres at Tiruchirappalli.

* 266 *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether there is any proposal to sell essential commodities like kerosene, sugar, maida, rava, etc., through mobile centres in Tiruchirappalli; and

(*b*) if so, the details of the same ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. என். கே. பழனிசாமி: இம் மாதிரி ஒரு பைலட் ஸ்கீமை ஏற்பாடு செய்து முக்கியமான பொருள்களை, ஜனங்களுக்கு, சார்ஜையும் சேர்த்து வேண்டுமானால் விநியோகிக்கக்கூடிய முறையிலே ஏதாவது ஏற்பாடு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவர் அவர்களே, இப்பொழுது கன்னியாகுமரி மாவட்டத்திலே ஒன்றும், சென்னையிலே இருக்கிற பெல்ட் ஏரியாக்களிலே 3-ம் வைத்திருக்கிறோம். அவசியம் ஏற்பட்டால் மற்ற இடங்களிலே அதை வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

Ration Shops.

* 267 *Q.*—THIRU K. SUPPU : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether it is a fact that the Government Ration Shops are running on loss at present; and

(*b*) if so, the reasons therefor ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

Site for temple near Vadapalani

* 268 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether it is a fact that the State Housing Board has allotted any piece of land for the construction of a Sakthi Vinayagar temple at Kalinga Colony near Vadapalani; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) & (இ) கலைஞர் கருணாநிதி நகர்த் திட்டப் பகுதியில் சுமார் 4 கிரவுண்டு, 30 சதுர அடி பரப்புள்ள நிலத்தை அருள்மிகு சக்தி விநாயகர் கோயில் அறக் குழுவுக்கு ஒதுக்குவது என்று மாநில வீட்டு வசதி வாரியம் முடிவெடுத்துள்ளது. அந்த நிலத்தின் விலை, மனை ஒன்றுக்கு ரூ. 6,700 என்ற தோராய வீதத்தில் ரூ 26,834 ஆகிறது. விலையில் 25 சதவீதம் செலுத்தப்படுவதன்மேல் முறையான ஒதுக்கீட்டு ஆணை பிறப்பிக்கப்படும்.

Tap-water facilities in Foreshore Estate

* 269 *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Labour be pleased to state the steps taken to provide tapwater facilities inside the houses in the Foreshore Estate, Madras?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : சென்னை பட்டினப்பாக்கத்தில் உள்ள வீடுகளுக்கு வீட்டுக்குள்ளேயே குழாய்த் தண்ணீர் வசதி அளிக்கப்பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி: அங்கே கிரவுண்ட் ப்ளோரிலே இருக்கக் கூடிய வீடுகளுக்குத்தான் கொடுக்கப்படுகிறது. பர்ஸ்ட் ப்ளோர், செக்கண்ட் ப்ளோரிலே இருக்கக்கூடியவர்களுக்குத் தண்ணீர் வசதியில்லை. ஆகவே, அதையும் செய்துகொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: சில இடங்களிலே குழாய்கள் துருப் பிடித்துவிட்டதாகச் செய்தி வந்தது. அதைப்பற்றி பரிசீலித்துக்கொண்டு இருக்கிறார்கள். அங்கேயுள்ள வீடுகளுக்கு ஓவர்ஹெட் டாங்க் கட்டப்பட்டு வருகிறது ஆகவே, விரைவிலே அந்தக் குறைகள் எல்லாம் நிவர்த்திக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Ennore Thermal Plant

* 270 *Q.*—THIRU M. SURENDRAN AND THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether there is any proposal to commission a fifth unit at the Ennore Thermal Plant; and

(*b*) if so, the details thereof ?